**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC.89/2017**

**Prosecution Witnesses : 7**

| | | | |
|---|---|---|---|
| Name | : ராஜராஜன் | Caste | : |
| Father 's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(Accused present)
**03.07.2024**
**முதல் விசாரணை**

நான் இறுதியாக 2019 ம் வருடம் விழுப்புரம் மாவட்டத்தில் கூடுதல் காவல் கண்காணிப்பாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்று தற்போது விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டையில் குடியிருந்து வருகின்றேன். நான் இதற்கு முன்பு திருநகர் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணியில் இருந்த போது உதவி ஆய்வாளர் திரு. புகழேந்திர பதிவு செய்து என் பார்வைக்கு வைத்த திருநகர் காவல் நிலைய குற்ற எண். 67/2006 பிரிவுகள் 394 உ/இ 511 இதச வின் படியான வழக்கை மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவம் இடம் சென்று பார்வை மகசர் சாட்சிகளின் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வைஇட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். மேற்படி பார்வை மகசர் அ.சா.ஆ.3, மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆகும். மேலும் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 7 வரை உள்ளவர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவுசெய்து பிரிவு மாற்றல் அறிக்கை அ.சா.ஆ.5 யை தயார் செய்து வைத்திருந்த நிலையில் எனக்கு பணி மாறுதல் வரவே வழக்கு கோப்புகளை நிலையம் வைத்து சென்றேன். அதன் பின் வந்த ஆய்வாளர் மேல் விசாரணை செய்து குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பில் கு.வி: இல்லை**